## March 21, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாடு முழுவதும் பிரீமியம் ரக பெட்ரோல் விலையை பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் லிட்டருக்கு ரூ.2 உயர்த்தியுள்ளன. அதே நேரத்தில் சாதாரண பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படவில்லை.

(i) கைப்பேசி டவருக்கு தேவைப்படும் மின்சார பயன்பாடு உள்ளிட்டவற்றுக்காக அதிக அளவு வாங்கப்படும் தொழிற்சாலை பயன்பாட்டுக்கான டீசல் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ii) ஈரான், இஸ்ரேல்-அமெரிக்கா இடையேயான போர் சுமார் மூன்று வாரங்களைத் தாண்டி நீடித்து வருகிறது. இந்தப் போரில் இஸ்ரேல்- அமெரிக்காவுக்கு நெருக்கடி அளிக்கும் வகையில், கச்சா எண்ணெய்க் கப்பல்கள் செல்லும் முக்கியக் கடல் பகுதியான ஹோர்மூஸ் நீரிணையை ஈரான் மூடியுள்ளது.

(iii) இதனால் வளைகுடா நாடுகளில் இருந்து கப்பல்களில் ஹோர்முஸ் நீரிணை வழியாக கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு கொண்டுவருவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, கச்சா எண்ணெய்யின் விலை சர்வதேச சந்தையில் பீப்பாய்க்கு 100 அமெரிக்க டாலருக்கும் மேல் உயர்ந்துள்ளது.

(iv) இந்தியா தனக்குத் தேவையான கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவில் 88 சதவீதத்தை வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்கிறது. அதில் பெரும் பகுதி கச்சா எண்ணெய், எரிவாயு ஆகியவை வளைகுடா நாடுகளில் இருந்து ஹோர்முஸ் நீரிணை வழியேதான் கப்பல்களில் கொண்டு வரப்படுகின்றன. மேற்காசிய போரால், அந்தக் கப்பல்கள் இந்தியா வருவது பாதிக்கப்பட்டுள்ளது.

(v) இதனால் இந்தியாவில் எந்த நேரமும் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படலாம் என எதிர்பார்க் கப்பட்டுவந்தது. இந்நிலையில், நாடு முழுவதும் பிரீமியம் ரக பெட்ரோல் விலையை லிட்டருக்கு 2 ரூபாயும், டீசல் தொழிற்சாலைகளுக்கான விலையை லிட்டருக்கு 22 ரூபாயும் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களான இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனம் ஆகியவை உயர்த்தின.

(vi) இந்தியன் ஆயில் விளக்கம்:

எக்ஸ் பக்கத்தில் இந்தியன் ஆயில் நிறுவனம் வெளியிட்டுள்ள பதிவில், 'சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்திருப்பதால் அதற்கேற்ப இந்தியாவில் விலை உயர்த்தப்பட்டுள்ளது. அதுவும் சாதாரண வாகன எரிபொருள்களின் விலையை உயர்த்தவில்லை. பிரீமியம் ரக பெட்ரோல் விலை மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- உக்ரைன் மீதான ரஷியாவின் போரால் கடந்த 2022-ஆம் ஆண்டு ஜூன் மாதம் கச்சா எண்ணெய் விலை சர்வதேச சந்தையில் பீப்பாய்க்கு 119 டாலராக உச்சம் தொட்டது. அப்போது இந்தியாவில் எண்ணெய் நிறுவனங்களின் லாபம் குறைந்தது. ஆனால், 2024- ஆம் நிதியாண்டில் எண்ணெய் நிறுவனங்கள் ரூ.81,000 கோடி லாபம் ஈட்டின. இந்த நிதியாண்டில் டிசம்பர் வரையிலான காலாண்டு காலத்தில் எண்ணெய் நிறுவனங்கள் ரூ.23,743 கோடி லாபம் பெற்றதாகத் தெரிவித்துள்ளன.

2. ஹோர்முஸ் நீரிணை வழியாக கப்பல்கள் பாதுகாப்பாக பயணிப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு பங்களிக்கத் தயார் என்று பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஜப்பான், கனடா ஆகிய 7 நாடுகள் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக அந்த நாடுகளின் தலைவர்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு மையங்கள், ஆயுதங்கள் எதுவும் வைத்திராத சரக்குக் கப்பல்கள் மீது ஈரானின் தாக்குதல், ஹோர்முஸ் நீரிணயை அந்நாடு மூடி யது ஆகியவற்றுக்குக் கண்டனம் தெரிவிக்கிறோம்.

(ii) சரக்குக் கப்பல்களின் பயணத் தைத் தடுக்க ஹோர்முஸ் நீரிணையில் கண்ணிவெடி வைத்தல், ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் நடத்துதல் மற்றும் பிற முயற்சிகளை ஈரான் உடனடியாகக் கைவிட்டு, ஐ.நா. பாதுகாப்பு தீர்மானம் 2,817-ஐ அந்த நாடுபின் பற்ற வேண்டும்.

(iii) ஹோர்முஸ் வழியாகப் பயணிக்க ஈரான் வரி?

- பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடா வுக்குஇடையே உள்ளஹோர்முஸ் நீரிணை வழியாக உலக அளவில் சுமார் 20 சதவீத கச்சா எண்ணெய், திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி) கொண்டு வரப்படுகின்றன. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான போரால், அந்தப் பாதையை ஈரான் மூடியது.
- இதனால் கச்சா எண்ணெய் மற்றும் எல்என்ஜி கிடைப்பதில் இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது. கப்பல் போக்குவரத்து, எரிசக்தி போக்குவரத்து, உணவு விநியோகம் ஆகியவற்றுக்காக ஹோர்முஸ் நீரிணையைப் பல நாடுகள் பயன்படுத்தும் நிலையில், அந்த நீரிணையைப் பயன்படுத்துவதற்கு அந்த நாடுகளிடம் இருந்து சுங்கக் கட்டணம் மற்றும் வரி வசூலிக்க ஈரான் திட்டமிட்டு வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

3. ஈரான் போரைக் கருத்தில்கொண்டு அமெரிக்காவுக்கான ஆயுத ஏற்றுமதியை ஸ்விட்சர்லாந்து அரசு அதிரடியாக நிறுத்தியது.

(i) தனது நாட்டின் பாரம்பரிய நடுநிலைக் கொள்கையைச் சுட்டிக்காட்டியுள்ள ஸ்விட்சர்லாந்து அரசு, ஈரான் மீதான தாக்குதலில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்காது என அறிவித்தது.

(ii) முன்னதாக, ஈரான் போர் தொடர்பாக அமெரிக்க போர் விமானங்களின் வான்வழிப் பயணக் கோரிக்கைகளையும் ஸ்விட்சர்லாந்து நிராகரித்திருந்தது. கடந்த சில ஆண்டுகளாகவே இஸ்ரேலுக்கு ஆயுத ஏற்றுமதியை ஸ்விட்சர்லாந்து நிறுத்தியுள்ளது குறிபிடத்தக்கது.

4. அமெரிக்க போர் விமானங்கள் இலங்கையில் தரையிறங்குவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கையைத் தனது அரசு நிராகரித்துவிட்டதாக அதிபர் அநுரகுமார திசநாயக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

(i) கிழக்கு ஆப்பிரிக்க நாடான ஜியூட்டியில் உள்ள ராணுவ முகாமிலிருந்து ஏவுகணைகளுடன் தென்கிழக்கு இலங்கையின் மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு வர 2 அமெரிக்க போர் விமானங்களுக்கு மார்ச் 4,8 ஆகிய தேதிகளில் அனுமதி கோரப்பட்டுள்ளன. எனினும், இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாக்கும் வகையில் அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதாக அநுரகுமார திசநாயசு குறிப்பிட்டார். மத்திய கிழக்கு போர்ச்சூழல் பல்வேறு சவால்களை ஏற்படுத்தினாலும், சர்வதேச விவகாரங்களில் இலங்கை தனது நடுநிலையைத் தொடர்ந்து நிலைநாட்டும் என்று அவர் உறுதியளித்தார்.

5. நாட்டின் 8 முன்னணி உள்கட்டமைப்புத் துறைகளின் உற்பத்தி வளர்ச்சி கடந்த பிப்ரவரியில் 2.3 சதவீதமாகக் குறைந்தது.

(i) கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தியில் ஏற்பட்ட தொய்வு காரணமாக இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, நாட்டின் தொழில் துறை வளர்ச்சிக்கு முக்கியத்தூண்களாக விளங்கும் நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு. சுத்திகரிப்புத் தயாரிப்புகள், உரங்கள், எஃகு, சிமெண்ட், மின்சாரம் ஆகிய எட்டு துறைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி கடந்த ஜனவரியில் 4 சதவீதமாக இருந்த நிலையில், பிப்ரவரியில் அது 2.3 சதவீதமாகச் சரிந்துள்ளது.

(ii) கச்சா எண்ணெய் உற்பத்தி பிப்ரவரியில் 5.2 சதவீதம் சரிவைச் சந்தித்தது. நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான காலத்தில் இத்துறை 2.5 சதவீதம் சரிந்துள்ளது. இயற்கை எரிவாயு துறையிலும், கடந்த மாதத்தைப் போல 5 சதவீத உற்பத்திச் சரிவு நீடிக்கிறது.

(iii) எட்டு துறைகளில் முக்கியப் பங்கு வகிக்கும் பெட்ரோலிய சுத்திகரிப்பு உற்பத்தி கடந்த மாதம் மாற்றமின்றி இருந்த நிலையில் பிப்ரவரியில் 1 சதவீதம் சரிந்தது.

(iv) சிமெண்ட் உற்பத்தி 9.3 சதவீதமும், எஃகு உற்பத்தி 7.2 சதவீதமும் வளர்ச்சியைப் பதிவு செய்தன. இருப்பினும், ஜனவரியுடன் ஒப்பிடுகையில் (சிமெண்ட் 11.3 சதவீதம், எஃகு 11.5 சதவீதம்) இது குறைவாகும். அதேபோல், உரத் துறை 3.4 சதவீதமும், நிலக்கரித் துறை 2.3 சதவீதமும் வளர்ச்சியைப் பெற்றன.

(v) பொருளாதார பாதிப்பு:

- நாட்டின் ஒட்டுமொத்த தொழில்துறை உற்பத்திக் குறியீட்டில் (ஐஐபி) இந்த எட்டு துறைகளின் பங்களிப்பு சுமார் 40 சதவீதமாகும்.
- ஏற்கெனவே ஜனவரி மாதத்தில் தொழில்துறை வளர்ச்சி 0.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. இது கடந்த 14 மாதங்களில் இல்லாத மிகக் குறைந்த அளவாகும்.
- தற்போது பிப்ரவரி மாதத்திலும் உள்கட்டமைப்புத் துறைகள் மந்தமாக இருப்பதால், இது நாட்டின் ஒட்டு மொத்தப் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

6. ஆண்டுக்கு 6,000 மெட்ரிக் டன் (எம்டிபிஏ) அரியவகை புவி காந்தத்தை உற்பத்தி செய்யும் ஆலைகளை அமைப்பதற்கான ஏல நடை முறைகளை மத்திய அரசு வெள்ளிக்கிழமை (மார்ச் 20) தொடங்கியது.

(i) ரூ.7,280 கோடியில் சின்டர்ட் அரிய வகை நிரந்தர புவி காந்த உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் இதற்கான ஆலைகளை அமைக்க மத்திய அரசு ஏல அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

(ii) மின்னணு வாகனங்கள், காற்று விசையாழிகள், நவீன மின்னணு பொருள்கள், வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த செயல்பாடுகளுக்கு நியோடைமியம்-இரும்பு-போரான் உள்பட அரியவகை புவி காந்தங்கள் தேவைப்படுகின்றன. இவை தற்போது சீனாவில் இருந்து அதிகப்படியாக இறக்குமதி செய்யப்படும் நிலையில், அதைக் குறைத்து இந்தியாவை உலகளவில் அரியவகை புவி காந்த மையமாக மாற்ற மத்திய அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

(iii) ஆண்டுக்கு 6,000 மெட்ரிக் டன் (எம்டிபிஏ) அரியவகை புவி காந்த உற்பத்தி ஆலைகளை அமைப்பதற்கான ஏலம் தொடங்கியது. ஏல விண்ணப்பத்தை சமர்ப்பிக்க மே 28-ஆம் தேதி வரை காலஅவசாம் வழங்கப்பட்டுள்ளது.

(iv) ஏலத்துக்கு முந்தைய மாநாடு ஏப்ரல் 7-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், தொழில்நுட்ப ஏலம் மே 29-ஆம் தேதி தொடங்குகிறது.

(v) மத்திய பொது கொள்முதல் (சிபிபி) வலைதளத்தில் வெளிப்படையான குறைந்த செலவு முறையில் (எல்சிஎஸ்) இணைய வழியில் தொழில்நுட்ப மற்றும் நிதி என இரண்டு கட்டங்களாக ஏலம் நடை பெறுகிறது.

(vi) கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ரூ.7,280 கோடியில் சின்டர்ட் அரிய வரை நிரந்தர புவி காந்த உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(vii) இத்திட்டத்தின்கீழ் மூலதன மானியத்துக்கு ரூ.750 கோடியும் விற்பனை தொடர்புடைய ஊக்கத்தொகையாக ரூ.6,450 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. இந்தியா - சீனா இடையே 6 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு உத்தரகண்ட் மாநிலம் லிபு லேக் கணவாய் வழியாக எல்லை வர்த்தகம் தொடங்கவிருக்கிறது.

(i) கரோனா பாதிப்பு மற்றும் இரு நாடுகளிடையேயான எல்லை பதற்றம் காரணமாக கடந்த 2019-

ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட இந்த வர்த்தகம், தற்போது மீண்டும் தொடங்கப்பட உள்ளது.

(ii) இதுகுறித்து பிதோராகர் மாவட்ட ஆட்சியர் அஷிஷ் பட்காய் கூறியதாவது:

- மத்திய அரசின் அறிவுறுத்தல் மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் தடையில்லா சான்றைத் தொடர்ந்து, இந்த எல்லை வர்த்தகத்தை மீண்டும் தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த இருதரப்பு எல்லை வர்த்தகம் வழக்கமாக ஜூன் மாதம் முதல் செப்டம்பர் வரை நடைபெறக்கூடியதாகும்.
- அதற்கேற்ப, எல்லை அனுமதிச் சீட்டுகளை (பாஸ்) வழங்குவது, வெளிநாட்டு பண மாற்றத்துக்கான வங்கிகளை நிர்ணயிப்பது, சுங்கத்துறை மற்றும் தர்சுலா நகர நிர்வாகமும் இந்த வர்த்தகத்துக்கான விரிவான திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
- இந்த எல்லை வர்த்தகத்தில், இந்தியவின் வெல்லம், புகையிலை, மசாலாப் பொருள்கள், பருப்பு வகைகள், காஃபி, சமையல் எண்ணெய், நெய் உள்ளிட்ட பொருள்கள் விற்பனை செய்யப்படும். அதுபோல, சீனா தரப்பில் ஆடுகள், செம்மறி ஆட்டுதோல், வெண்ணெய் உள்ளிட்ட பொருள்கள் விற்பனை செய்யப்படும்.

8. மேற்காசியப் போரால் கச்சா எண்ணெய், எரிவாயு விலை உயர்ந்து வரும் நிலையில் எரிபொருளை குறைவாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்த வேண்டும் என்று சர்வதேச எரிசக்தி ஆணையம் யோசனை தெரிவித்துள்ளது.

(i) இதனைப் பின்பற்றுவதன் மூலம் தனிநபர்கள் பயனடைவதுடன் தேசத்தையும் பொருளாதார பாதிப்புகளில் இருந்து காக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) பாரீஸை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இந்த ஆணையம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

- அலுவலகம் உள்ளிட்ட இடங்களுக்கு ஒவ்வொருவரும் தனித்தனி கார்களில் பயணிக்காமல், குழுவாக ஒரே காரில் செல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அத்தியாவசியத் தேவை ஏற்பட்டால் மட்டுமே விமானப் பயணங்களை மேற்கொள்ள வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளில் அதிகபட்ச வேகத்துக்கான வரம்பை குறைக்க வேண்டும். வீட்டில் இருந்து அலுவலகப் பணிகளை மேற்கொள்வதை அதிகரிக்க வேண்டும். மின்வாகனங்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும்.
- எரிவாயுத் தட்டுப்பாட்டை சமாளிக்க உயிரி எரிபொருள் பயன்பாட்டை அதிகரிப்பது, மின்சார அடுப்புகளைப் பயன்படுத்துவது, சூரிய மின் உற்பத்தியை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- சர்வதேச கச்சா எண்ணெய் போக்குவரத்தில் சுமார் 20 சதவீதம் ஹோர்முஸ் நீரிணை வழியாகவே நடைபெறுகிறது. இப்போது ஏற்பட்டுள்ள போரால் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு, பலநாடுகளுக்கு எரிபொருள் விநியோகம் குறைந்துவிட்டது. விலையும் அதிகரித்துள்ளது.
- இதனைச் சமாளிக்க சர்வதேச எரிசக்தி ஆணையத்தில் உறுப்பினராக உள்ள நாடுகள் தங்கள் அவசரகால இருப்பில் உள்ள 400 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய்யை விடுவிக்க கடந்த 11-ஆம் தேதி ஒப்புக் கொண்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஆணையத்தின் செயல் இயக்குநர் ஃபாதிக் பிரோல் இது தொடர்பாக கூறுகையில், 'இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளித்து விநியோகத்தை சீராக்கத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் ஆணையம் வழங்கி வருகிறது.
- எரிபொருள் விநியோகச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இதில் தொடர்புடைய அனைத்து நாட்டு அரசுகளுடனும் பேச்சு நடத்தப்படுகிறது. முக்கியமாக, அதிக உற்பத்தி செய்யும் நாடுகள், அதிகம் பயன்படுத்தும் நாடுகளுடன் தொடர்ந்து தொடர்பில் உள்ளோம்.

9. மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழலால் விநியோகச் சங்கிலியில் இடையூறுகள் நிலவிவரும் நிலையில் சரக்குப் போக்குவரத்து (லாஜிஸ்டிக்ஸ்) துறையை மேம்படுத்த மத்திய அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஈரான் மற்றும் அமெரிக்கா,

இஸ்ரேல் இடையேயான மோதல் தொடர்வதால் உலகளவில் சரக்கு மற்றும் சேவைகள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதை எதிர்கொள்ள இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் கூறியதா வது:

(i) ஒருங்கிணைந்த கொள்கை சீர்திருத்தங்கள், எண்ம தளங்கள், பெருமளவிலான உள்கட்டமைப்புத் திட்டங்கள் என இந்தியாவில் லாஜிஸ்டிக்ஸ் துறையில் பல்வேறு' மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

(ii) நகரங்கள் மற்றும் மாநில அளவில் லாஜிஸ்டிக்ஸ் மேம்பாட்டை உறுதிப்படுத்த பன்முக மற்றும் ஒருங்கிணைந்த லாஜிஸ்டிக்ஸ் அமைப்பை வலுப்படுத்துதல் (ஸ்மைல்) திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 8 மாநிலங்களில் உள்ள 8 நகரங்களில் முதல்கட்டமாக உள்கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(iii) தேசிய லாஜிஸ்டிக்ஸ் கொள்கை மற்றும் பிரதமரின் கதிசக்தி திட்டம் லாஜிஸ்டிக்ஸ் சீர்திருத்தங்களுக்கு புத்துயிர் அளிக்கின்றன.

(iv) முறையற்ற திட்டமிடல், திறனற்ற தொழில் மாதிரிகள், விநியோக சங்கிலி இடையூறு, அதிக லாஜிஸ்டிக் விலை போன்ற நீண்ட கால பிரச்னைகளுக்கு தீர்வுகாண மேற்கூறிய சீர்திருத்தங்கள் வழிவகுக்கின்றன.

(v) லாஜிஸ்டிக்ஸ் துறைக்கு இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) ரூ.24.01 லட்சம் கோடி (7.97 சதவீதம்) செலவிடப்படுகிறது. மேற்காசிய போர்ப் பதற்றத்தால் விநியோக சங்கிலியில் இடையூறுகள் நிலவிவரும் நிலையில் லாஜிஸ்டிக்ஸ் துறைக்கான முக்கியத்துவத்தை மத்திய அரசு மேலும் அதிகரித்துள்ளது என்றனர்.

10. இந்திய பல் மருத்துவ கவுன்சிலுக்கு மாற்றாக தேசிய பல் மருத்துவ ஆணையத்தை மத்திய அரசு அமைத்துள்ளது. இதுதொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) இந்திய பல் மருத்துவ கவுன்சிலுக்கு மாற்றாக 3 தன்னாட்சி வாரியங்களுடன் தேசிய பல் மருத்துவ ஆணையத்தை மத்திய அரசு அமைத்துள்ளது. பல் மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டும், அந்தக் கல்வி உலகளாவிய தர நிலைக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்ற நோக்கில், இந்த முக்கிய சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) ஆணையத்தின் பணி என்ன?:

- தேசிய பல் மருத்துவ ஆணைய சட்டப் பிரிவுகளை அமல்படுத்துவதற்கான விதிமுறைகளை வகுத்தல், பல் மருத்துக்கல்வி நிறுவனங்களின் தரமதிப்பீட்டை மேற்கொள்ளுதல், பல் மருத்துவ ஆராய்ச்சியை ஊக்குவித்தல், தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளில் கட்டண விதிமுறைகளுக்கு வழிகாட்டுதல்களை வகுத்தல், பொது சுகாதாரப் பல் மருத்துவம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில் தர்மம் ஆகியவற்றுக்கு தர நிலைகளை உருவாக்குதல் ஆகிய பணிகளைத் தேசிய பல் மருத்துவ ஆணையம் மேற்கொள்ளும்.
- இந்த ஆணையத்தின் தலைவராக மருத் துவர் சஞ்சய் திவாரி, பகுதி நேர உறுப்பி னராக மருத்துவர் மௌசுமி கோஸ்வாமி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த ஆணையத்துடன் பல்மருத்துவக் கல்வியை மேற்பார்வையிட இளநிலை மற்றும் முதுநிலை பல் மருத்துவக் கல்வி வாரியம், கல்வி நிறுவன மதிப்பீடு மற்றும் அங்கீகாரத்தை ஒழுங்குபடுத்த பல் மருத்துவ மதிப்பீடு வாரியம், பல் மருத்துவர்களின் தொழில்முறை நடத்தை மற்றும் பதிவை நெறிப்படுத்த நெறிமுறைகள் மற்றும் பல் மருத்துவப் பதிவு வாரியம் ஆகி யவை அமைக்கப்பட்டுள்ளன.
- இதுதொடர்பான அறிவிக்கைகள் கடந்த மார்ச் 19-ஆம் தேதி வெளியிடப்பட்டன. அந்த நாள் முதல் தேசிய மருத்துவ ஆணையம் செயல்பாட்டுக்கு வருகிறது.
- தேசிய பல் மருத்துவ ஆணையச் சட்டம் மார்ச் 19 முதல் அமலுக்கு வந்த நிலையில், 1948-ஆம் ஆண்டின் பல் மருத்துவர்கள் சட்டம் ரத்து செய்யப்பட்டு, இந்திய பல் மருத்துவ கவுன்சில் கலைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களுக்கான 12 மணிநேர வேலை நேரத்தை 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என சென்னை தொழிலாளர் தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

(i) நாடு முழுவதும் கடந்த 2005- ஆம் ஆண்டு முதல் 108 ஆம்புலன்ஸ் சேவைத்திட்டம் தொடங்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் தற்போது 1,353 ஆம்புலன்ஸ் வாகனங்கள் இயக்கப்படுகின்றன. இதில் 5,000-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் உள்ளனர். இவர்கள், தினமும் 12 மணிநேரம் வேலை என்ற அடிப்படையில் இரண்டு ஷிப்டுகளில் பணியாற்றுகின்றனர்.

(ii) இந்த நிலையில், தங்களது வேலை நேரத்தை 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என ஆம்புலன்ஸ் ஊழியர்கள் தமிழக அரசிடம் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கை தொடர்பான பேச்சியில் உடன்பாடு எட்டப்படவில்லை. இதையடுத்து இந்த விவகாரம் தொழிலாளர் தீர்ப்பாய விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(iii) இந்த வழக்கு தொழிலாளர் தீர்ப்பாயத்தின் தலைவர் பி.முருகன் முன் விசாரணைக்கு வந்தபோது, தமிழ்நாடு 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் சங்கம் தரப்பில், 12 மணி நேரம் பணியாற்றுவதால், ஊழியர்கள் தூக்கமின்மை உள்ளிட்ட உடல்நலக் குறைவுகளால் பாதிக்கப்படுகின்றனர். இதனால், சில நேரங்களில் விபத்துகளும் நிகழ்கின்றன. மேலும் 12 மணி நேர பணி நடைமுறை என்பது தொழிலாளர் சட்டத்துக்கு விரோதமானது என வாதிடப்பட்டது.

(iv) ஆம்புலன்ஸ் நிறுவனம் தரப்பில், எவ்வித லாப நோக்கமும் இன்றி பொதுமக்களுக்கு 24 மணி நேரமும் இலவச சேவை வழங்கப்படுகிறது. ஆம்புலன்ஸ் ஊழியர்களுக்கு 12 மணி நேரப் பணி நடைமுறைதான் நாடு முழுவதும் பின்பற்றப்படுகிறது. இதை ஏற்றுக்கொண்டுதான் ஊழியர்கள் இப்பணியில் சேர்ந்தனர். மேலும், ஊழியர்களுக்கு 12 மணி நேரத்துக்கான ஊதியம் தான் வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

(v) இதை ஏற்க மறுத்த தீர்ப்பாய தலைவர், சர்வதேச தொழிலாளர் அமைப்பு விதிகளின்படி ஒரு நாளைக்கு 8 மணி நேரமே பணி நேரமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே தொழிலாளர் சட்டங்களுக்கு விரோதமான 12 மணி நேரப் பணி நேரத்தை 8 மணி நேரமாக குறைக்க வேண் டும் என உத்தரவிட்டார். மேலும், இந்த உத்தரவு குறித்து தொழில் தகராறு சட்டத்தின் கீழ் அரசிதழில் அறிவிக்கை வெளியிட்ட 30 நாள்களில் இந்த 8 மணி நேரப் பணி நடைமுறை அமலுக்கு வரும்.

(vi) அதுவரை 12 மணி நேரம் பணியாற்றும் ஊழியர்களுக்கு கூடுதல் பணி நேரத்துக்கான ஊதியத்தை ஆம்புலன்ஸ் நிறுவனம் வழங்க வேண்டும். மேலும் 108 ஆம்புலன்ஸில் பணியாற்றும் பெண் ஊழியர்களுக்கு, ஆம்புலன்ஸ் நிறுத்தி வைக்கப்படும் அரசு மருத்துவமனை உள்ளிட்ட அரசு கட்டடங்களில் தனி ஓய்வறைகள் அமைக்க வேண்டும். அங்குள்ள கழிப்பறைகளை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

12. எளிமைப்படுத்தப்பட்ட புதிய வருமான வரிச் சட்டம் 2025-க்கான விதிகளை மத்திய நேரடி வரிகள் வாரியம் (சிபிடிடி) அறிவிக்கை செய்தது.

(i) 'வருமான வரி விதிகள் 2026' என்ற பெயரிலான இந்த விதிகள், வரும் ஏப்ரல் 1-ஆம் தேதிமுதல் அமலுக்கு வரும்' என்று அரசிதழ் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) அதில், ஊதியதாரர்களுக்கு வீட்டு வாடகைப் படிக்கான வரிச்சலுகைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், வீட்டு உரிமையாளர் - வாடகைதாரர் இடையேயான உறவு குறித்த விவரங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(iii) 60 ஆண்டுகள் பழைமையான 'வருமான வரிச் சட்டம் 1961'-ஐ மாற்றும் வகையில், புதிய வருமான வரிச் சட்ட மசோதாவுக்கு நாடாளுமன்றம் கடந்த 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12-ஆம் தேதி ஒப்புதல் அளித்தது. இந்தப் புதிய சட்ட மசோதாவில் புதிய வரி விகிதங்கள் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை; மாறாக, கடினமான வருமான வரிச் சட்டங்களை வரி செலுத்துவோர் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் சட்டத்தின் மொழி நடை மட்டும் எளிமைப்படுத்தப்பட்டது.

(iv) குடியரசுத் தலைவரின் ஒப்புதலைத் தொடர்ந்து இந்த மசோதா சட்டமாக நிறைவேறியது. சட்டப் பிரிவுகளின் எண்ணிக்கை 819-லிருந்து 536-ஆகவும், சட்டத் தொகுதிகளின் எண்ணிக்கை 47-லிருந்து 23-ஆகவும் புதிய சட்டத்தில் குறைக்கப்பட்டது. வார்த்தைகளின் எண்ணிக்கை 5.12 லட்சத்திலிருந்து 2.6 லட்சமாக குறைக்கப்பட்டது. வரி விகித கணக்கு விவரத்தை வரி செலுத்துவோர் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் 39 புதிய வரி கணக்கீடு அட்டவணைகளும், 40 புதிய கணக்கீட்டு விதிமுறைகளும் புதிய சட்டத்தில் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன.

(v) புதிய விதியில் முக்கிய அம்சங்கள்:

- இதற்கான புதிய விதிகளை மத்திய நேரடி வரிகள் வாரியம் அறிவிக்கை செய்துள்ளது.அதில், மூலதன ஆதாயங்கள், பங்குச் சந்தை பரிவர்த்தனைகள், வெளிநாடு வாழ்வோர் மீதான வரி வதிப்பு தொடர்பான நடைமுறைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. அதே நேரம், பிற தகவல்களை வெளிப்படுத்துவது தொடர்பான நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.
- மேலும், வரி தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளுக்காக 'படிவம் 33' என்ற எண் கொண்ட படிவத்தில் தொடங்கி 150-க்கும் மேற்பட்ட அதிகாரபூர்வ படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- ஊதியதாரர்கள் பெறும் வீட்டு வாடகைப் படிக்கு வரி விலக்கு சலுகைகள் புதிய விதியில் விரி வுபடுத்தப்பட்டுள்ளன. அதன்படி, மும்பை, கொல்கத்தா, புது தில்லி, சென்னை, ஹைதராபாத், புணே, அகமதாபாத், பெங்களூரு உள்ளிட்ட 8 பெருநகரங்களில் வசிக்கும் ஊதியதாரர்கள், ஊதியத்தில் 50 சதவீதம் அளவுக்கு வாடகைப் படிக்கான வரி விலக்கைப் பெற முடியும். மற்ற பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இது 40 சதவீதம் என்ற அளவிலேயே தொடரும். தற்போது, மும்பை, புது தில்லி, கொல்கத்தா, சென்னை ஆகிய 4 பெருநகரங்களில் வசிப்ப வர்களுக்கு மட்டுமே ஊதியத்தில் 50 சதவீத உயர் வரி விலக்கு வரம்பு அளிக்கப்பட்டு வந்த நிலையில், கூடுதலாக ஹைதராபாத், புணே, அகமதாபாத், பெங்களூரு நகரங்களும் இந்த வரம்புக்குள் சேர்க்கப்பட்டுள்ளன.
- அதே நேரம், வீட்டு வாடகைப் படிக்கான வரிச் சலுகையைப் பெறுவோர், வீட்டு உரிமையாளர் வாடகைதாரர் இடையேயான உறவு குறித்த விவரங்களைச் சமர்ப்பிப்பது புதிய விதியில் கட்டாய மாக்கப்பட்டுள்ளது.
- திருமணம், கண்காட்சி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும் மண்டபங்கள் அல்லது விருந்து மண்டபங்களில் ஹோட்டல் மற்றும் உணவக கட்டணங்கள் ரூ.1 லட்சத்தை தாண்டினால் பான் (நிரந்தர கணக்கு எண்) எண்ணை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள விதிமுறைகளின்படி இந்தக் கட்டணங்கள் ரூ.50,000-ஐ தாண்டினால் பான் எண்ணை சமர்ப்பிக்க வேண்டும் என்றிருந்த நிலையில், செலவு வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.
- அதுபோல, எந்தவொரு அசையா சொத்து வாங்கும்போது, விற்பனை செய்யும்போது, பரிசளிக்கும்போது அல்லது அந்தச் சொத்து தொடர்பாக கூட்டு மேம்பாட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்ளும்போது அதற்கான மொத்த செலவு ரூ.10 லட்சமாக இருந்தால் பான் எண்ணைக் குறிப்பிட வேண்டும் என்று இருந்த நிலையில், இந்தச் செலவு வரம்பு ரூ.20 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, செலவு ரூ.20 லட்சத்தைக் கடக்கும் போது மட்டும் பான் எண்ணை சமர்ப்பித்தால் போதுமானது.

13. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு இடையே தீவிரமடைந்து வரும் மோதல் குறித்த பகுப்பாய்வு :-

(i) மோதலின் காலவரிசை (2026)

- பிப்ரவரி 6: பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு ஷியா மசூதியில் தொழுகையின் போது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 31 பேர் உயிரிழந்தனர் மற்றும் 169 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்திற்கு ஆப்கானிஸ்தானைத் தளமாகக் கொண்ட தெஹ்ரிக்-இ-தாலிபான் பாகிஸ்தான் (TTP) அமைப்பே காரணம் என்று பாகிஸ்தான் அதிகாரப்பூர்வமாகக் குற்றம் சாட்டியது.
- பிப்ரவரி 16: பாகிஸ்தானின் பஜௌர் மாவட்டத்தில் உள்ள ஒரு பாதுகாப்புச் சோதனைச் சாவடியில், வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை TTP பயங்கரவாதிகள் மோதச்

செய்தனர். இந்தத் தாக்குதலில் 11 ராணுவ வீரர்களும் ஒரு இளம் பெண்ணும் கொல்லப்பட்டனர்.

- பிப்ரவரி 26: இந்தத் தொடர்ச்சியான தாக்குதல்களைத் தொடர்ந்து, கோபமடைந்த பாகிஸ்தான் அரசாங்கம் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நேரடிப் போரை அதிகாரப்பூர்வமாக அறிவித்து, தனது இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது.
- மார்ச் தொடக்கத்தில்: பாகிஸ்தானின் தொடர்ச்சியான தாக்குதல்களால், ஆப்கானிஸ்தானுக்குள் இருந்த சுமார் 1.15 லட்சம் (115,000) மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி உள்நாட்டு அகதிகளாக மாற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- மார்ச் 16 (திங்கட்கிழமை இரவு): ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலில் உள்ள 2,000 படுக்கைகள் கொண்ட ஜாமியத் மருத்துவமனை மீது பாகிஸ்தான் ஒரு கடுமையான வான்வழித் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில் நோயாளிகள் உட்பட 400 பேர் உயிரிழந்தனர் மற்றும் 250 பேர் காயமடைந்தனர்.
- மார்ச் 20/21: ஈத்-உல்-பித்ர் பண்டிகையை முன்னிட்டு, பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் மூன்று நாள் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டன.

(ii) போருக்கான காரணங்கள்

- TTP கிளர்ச்சி: பாகிஸ்தான் அரசாங்கத்தைக் கவிழ்த்து, ஷரியா சட்டத்தின் அடிப்படையில் ஆட்சியை நிறுவ முற்படும் தெஹ்ரிக்-இ-தாலிபான் பாகிஸ்தான் (TTP) அமைப்பே இதற்கான முதன்மைக் காரணமாகும்.

(iii) மோதலின் விளைவுகள்

- காபூல் மருத்துவமனையில் 400 பேர் உயிரிழந்ததைத் தவிர, இந்தப் போர் முதன்மையாக அப்பாவி பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதித்துள்ளது.
- பொருளாதாரச் சரிவு: இரு நாடுகளும் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானில், ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ₹320 ஆக உயர்ந்துள்ளது, மேலும் அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுக்கடங்காமல் போயுள்ளது.
- ஆப்கானிஸ்தானின் நிலையற்ற தன்மை: 40 ஆண்டுகால நிலையற்ற தன்மை மற்றும் சர்வதேச அங்கீகாரம் இன்மை ஆகியவற்றால் ஏற்கனவே பலவீனமடைந்திருந்த ஆப்கானிஸ்தானின் பொருளாதாரம், தற்போதைய போரினால் முழுமையாகச் சிதைக்கப்பட்டுவிட்டது.
- 274 தாலிபான் உறுப்பினர்களைக் கொன்றதாகவும், 73 எல்லைச் சாவடிகளை அழித்ததாகவும் பாகிஸ்தான் கூறியுள்ளது. இதற்கு மாறாக, 55 பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதாகவும், தாங்கள் 19 எல்லைச் சாவடிகளைக் கைப்பற்றியதாகவும் தாலிபான் தரப்பு கூறியுள்ளது.

(iv) அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச எதிர்வினைகள்

- TTP தாக்குதல்களுக்குப் பதிலடியாக, காபூல், கந்தஹார் மற்றும் பாக்டியா ஆகிய பகுதிகளை இலக்காகக் கொண்டு பாகிஸ்தான் தனது விமானப்படையைப் பயன்படுத்தியது.
- இப்போராட்டச் சூழல் நிலவினாலும், ஆப்கானிய மக்களுக்கு இந்தியா அளித்து வரும் நீண்டகால ஆதரவை அது தொடர்ந்து வழங்கி வருகிறது. மருத்துவமனை குண்டுவெடிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் வகையில், மார்ச் 20, 2026 அன்று, 2.5 டன் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் அடங்கிய ஒரு தொகுப்பை இந்தியா காபூலுக்கு அனுப்பி வைத்தது.
- அமெரிக்காவின் நிலைப்பாடு: TTP தாக்குதல்களிலிருந்து தன்னைத் தற்காத்துக்கொள்ளும் உரிமை பாகிஸ்தானுக்கு உண்டு என்று அமெரிக்கா கூறியுள்ளது.

(v) முன்மொழியப்பட்ட தீர்வுகள் மற்றும் வழிமுறைகள்

- பாகிஸ்தானுக்கும் தாலிபானுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகள் தற்போது சாத்தியமற்றதாக இருப்பதால், இப்போர் முடிவுக்கு வர பாகிஸ்தான் மீது இந்தியாவும் பிற உலக வல்லரசுகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

- "தாக்குதல் நடத்துவது ஒரு தீர்வு அல்ல"; ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் மற்றும் இராணுவத் தாக்குதல்களை நிறுத்துவதன் மூலமே ஒரு நிரந்தரத் தீர்வைக் காண முடியும்.
- துன்புறும் ஆப்கானிய மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது தற்போதைய சூழலில் ஒரு மிக அவசியமான தேவையாகும்

P.L. RAJ IAS & IPS ACADEMY
SINCE 2006
MAKING YOU SERVE THE NATION